# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1343/31 – 2004 ජූනි 04 වැනි සිකුරාදා – 2004.06.04

*1343/31 ஆம் இலக்கம் - 2004 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1)(அ) பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய என்னால், வெளியிடப்பட்ட 1338/9 ஆம் இலக்கத்தையும் 2004.04.28 ஆந் திகதியையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதை அடுத்து, 1340/13 ஆம் இலக்கத்தையும், 2004.05.15 ஆந் திகதியையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட அறிவித்தலானது, இந்த அறிவித்தல் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணுமாறு மேலும் திருத்தியமைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2004, யூன் 04.*

(அ) 'நிதி அமைச்சர்' என்னும் தலைப்பின்கீழ் நிரல் I இன் இறுதியில், 'தேசிய திட்டமிடல் திணைக்களம்' எனும் சொற்றொடர்களைச் சேர்ப்பதன் மூலமும், அத்துடன்,

சொல்லப்பட்ட தலைப்பின் கீழ் நிரல் II இன் இறுதியில் பின்வரும் சொற்றொடர்களைச் சேர்ப்பதன் மூலமும்,

'தேசிய அபிவிருத்திக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இடைநிலைக் காலத்துக்கான பேரண்டப் பொருளாதார மாதிரியும், பிராந்திய திட்டமிடல் அபிவிருத்தியும்'

'பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபைக்கான தொழினுட்பத் திறன்'

'துறைகளுக்கான வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்'

'தொடர்புபட்ட அமைச்சுகளுடன் இணைந்து பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்'

'பிராந்திய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் அளவாய்வும், கண்காணிப்பும்'

(ஆ) 'பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்' எனும் தலைப்பின்கீழ் நிரல் I இன் இறுதியில், 'வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா இறப்பர் உற்பத்தி, ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம்' எனும் சொற்றொடர்களைச் சேர்ப்பதன் மூலமும்,

(இ) 'மகளிர் தத்துவமளிப்பு, சமூக நலனோம்புகை அமைச்சர்' எனும் தலைப்பின்கீழ் நிரல் I இன் இறுதியில் 'தேசிய இடர்காப்பு முகாமை நிலையம்' எனும் சொற்றொடர்களைச் சேர்ப்பதன் மூலமும். அத்துடன் சொல்லப்பட்ட தலைப்பின் கீழ் நிரல் I இன் இறுதியில், பின்வரும் சொற்றொடர்களைச் சேர்ப்பதன் மூலமும்.

'தீ, மழை, சூறாவளி அல்லது ஏனைய புறநடையான ஏதுக்களால் வதிவிடங்களுக்கும், தொழில் உபகரணங்களுக்கும், மீன்பிடிக்கலங்களுக்கும் ஏற்படும் நட்டத்துக்கான அமய நிவாரணங்கள்'

'வெள்ளப்பெருக்கு, வரட்சி, தொற்றுநோய் அல்லது ஏனைய புறநடையான ஏதுக்களினால் ஏற்படும் இடர்களுக்கான நிவாரணமும், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தலும், மீளக்குடியமர்த்தலும்'.

6-576

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.